நகர்மன்றம்,
உதகமண்டலம்,
27.12.2022.

**அன்புடையீர்,**

வணக்கம், இந்நகர்மன்ற டிசம்பர் 2022ம் மாத சாதாரணக் கூட்டம் வருகின்ற 30.12.2022, வெள்ளிக்கிழமை அன்று காலை 11.00 மணியளவில் நகரமன்ற தலைவர் திருமதி.எம்.வாணீஸ்வரி அவர்களின் தலைமையில் நகர்மன்ற கூட்டத்தில் நடைபெறுவதால் அனைத்து நகர்மன்ற உறுப்பினர்களும் மேற்பட கூட்டத்தில் கலந்து கொள்ளும் படி அன்புடன் கேட்டுக்கொள்ளப்படுகிறது. இத்துடன் கூட்டப்பொருள்கள் இணைக்கப்பட்டுள்ளன.

**<u>முன்னிலை : திருமதி.எம்.வாணீஸ்வரி, நகர மன்ற தலைவர்</u>**

**1.** இந்நகராட்சியில் அனைத்து வரி வசூல் இனங்களில் வரி வசூல் சதவீதம் 100 மேற்கொள்ள வேண்டியுள்ளதால், வசூல் பணிக்காக ஆட்டோவில் ஒலி பெருக்கி மூலமாக விளம்பரம் செய்ய 100 நாட்களுக்கு ஆகும் உத்தேச செலவினத் தொகை ரூ.2,00,000/-க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:-**

**அனுமதி வழங்கலாம்.**

**2.** இந்நகராட்சி நகரமைப்பு பிரிவில் உச்ச நீதிமன்றம் டெல்லி வழக்கு: SLP(C)20913/2019 வழக்கு தள்ளுபடி ஆனதற்கு இணங்க கீழ்காணும் வழக்கறிஞர் அவர்களுக்கு வழங்கப்பட வேண்டி உள்ளது.

| வ எண் | வழக்கறிஞர் பெயர் | தொகை |
|---|---|---|
| 1. | திரு.குமரன் | ரூ.16000/- |
| 2. | திரு.கிருஷ்ணமூர்த்தி | ரூ.35,000/- |
| 3. | திரு.நந்தகுமார் (ம) தீபிகா நந்தகுமார் | ரூ.2,20,000/- |
| | மொத்தம் | **ரூ.271000** |

எனவே மேற்கண்ட தொகையினை உரிய வழக்கறிஞர் அவர்களுக்கு வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:-**

**அனுமதி வழங்கலாம்.**

3. நகராட்சி குடியிருப்பு சம்பந்தமாக எல்.ஐ.ஜி குடியிருப்பில் வசித்து வரும் அங்கீகரிக்கப்படாத குடியிருப்பாளர்கள் அனுப்பி உள்ள சட்ட அறிவிப்பின் போது மேல்நடவடிக்கை தொடரும் பொருட்டு திரு.பி.ஸ்ரீனிவாஸ் வழக்கறிஞர், சென்னை உயர்நீதிமன்றம் அவர்களிடம் கோரப்பட்ட சட்ட கருத்துருக்களுக்கான கட்டணமாக ரூ.5,000/– வழங்கிட மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:–**

**அனுமதி வழங்கலாம்.**

4. நகராட்சி குடியிருப்பு சம்பந்தமாக திருமதி.மாணிக்கம்மாள் மற்றும் பலர் இந்நகராட்சிக்கு எதிராக சென்னை உயர்நீதிமன்றத்தில் தொடர்ந்த வழக்கில் (வழக்கு எண்.22071/2017), இந்நகராட்சி சார்பில் ஆஜரான வழக்கறிஞர் திரு.பி.ஸ்ரீனிவாஸ் அவர்களுக்கு வழக்கு கட்டணமாக ரூ.18,000/– வழங்கிட மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:–**

**அனுமதி வழங்கலாம்.**

5. உதகமண்டலம் நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் ரோஸ் கார்டன், மத்திய பேருந்து நிலையம் அருகில், அரசு தாவரவியல் பூங்கா அருகில், படகு இல்லம் அருகில், நகராட்சி சந்தை கழிப்பிடம் அருகில், காந்தல் சாலை, தேன் நிலவு படகு இல்லம், சேரிங்கிராஸ் அருகில், எம்.ஆர்.சி. பார்க்கிங் உட்புற. மற்றும் பேருந்து நிலையம் அருகில் சி.எஸ்.ஆர் நிதியின் கீழ் ரூ.28.90/– இலட்சம் மதிப்பீட்டில் மேற்கண்ட 10 இடங்களில் பணி செய்து முடிக்கப்பட்டுள்ளது. தற்பொழுது இக்கழிவறைகள் பராமரிப்பின்றி உள்ளதால் இக்கழிவறைகளிலுள்ள கதவு, குழாய்கள் மற்றும் உதிரி பாகங்களை அவ்வப்போது சமூக விரோதிகள் கழற்றி சென்று விடுகின்றனர். இதனால் இக்கழிவறைகளை சீராக பராமரிக்க இயலாத சூழ்நிலை உள்ளது. இந்நகராட்சியானது ஒரு சுற்றுலாத் தளமாக உள்ளதால் அனைத்து பகுதிகளிலும் சுற்றுலா பயணிகள், பொதுமக்கள் அதிக அளவில் தினசரி வந்து செல்கின்றனர். இக்கழிவறைகள் அனைத்து நகரின் மத்தியப் பகுதிகளில் அமைந்துள்ளதால் சுற்றுலாப் பயணிகள் மற்றும் பொதுமக்கள் அதிகமாக பயன்படுத்தி வருகின்றனர். மேற்கண்ட கழிவறைகள் நல்ல முறையில் பராமரிக்கும் பொருட்டு வருடாந்திர பராமரிப்பு பணி ஒரு நிறுவனத்திற்கு வழங்கி பராமரிப்பு பணிகள் மேற்கொள்ள நகரமன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:–**

**அனுமதி வழங்கலாம்.**

6. உதகமண்டலம் நகராட்சி எல்லைக்குட்பட்ட காந்தல் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையத்தில் (Online Contineous Monitoring System) ஆன்லைன் மூலம் தொடர்ச்சியான கழிவுநீர் கண்காணிப்பு அமைப்பு பணிகளுக்காக மினி கார்டன் கழிவு நீரேற்கு நிலையத்திலிருந்து காந்தல் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையத்திற்கு வரும் 400mm விட்டமுள்ள கழிவுநீர் குழாயில் Electro Magnetic Flow meter புதிதாக வாங்கி பொருத்தவும், மேலும் STP Inlet 250mm விட்டமுள்ள DI குழாய் மற்றும் Special வாங்கி பொருத்துவதற்கு Inlet மற்றும் Outlet Electro Magnetic Flow meterல் ஊயடெந பதித்து இதனை கண்காணிக்கும் இயந்திரத்தில் (Monitoring Analyzer – for BOD, COD, TSS, PH Value) இணைப்பு வழங்க வேண்டியுள்ளது. மேற்கண்ட அறையில் மின் இணைப்பு இல்லாத காரணத்தினால் மின் இணைப்பு வழங்கி Plug Point, Light Point, MCB மற்றும் Tube Light fitting–குகள் வாங்கி பொருத்துவதற்கு தயாரிக்கப்பட்ட உத்தேச மதிப்பீடு தொகை ரூ.9.50/– இலட்சத்திற்கு பணியினை நகராட்சி குடிநீர் மற்றும் வடிகால் நிதியில் பணி மேற்கொள்ள நகரமன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:–**

**அனுமதி வழங்கலாம்.**

7. உதகமண்டலம் நகராட்சிக்குட்பட்ட கணபதி தியேட்டர் சாலையில் கழிவுநீர் குழாய்கள் மற்றும் தொட்டிகள் பழுதடைந்துள்ளதால் மழைக்காலங்களில் கீழ் பகுதியிலுள்ள கடைகளுக்குள் கழிவுநீர் சென்று விடுகிறது. எனவே பொது மக்கள் நலன் கருதி பழுதடைந்துள்ளதால் கழிவுநீர் குழாய்கள் மற்றும் தொட்டியினை சீரமைக்க தயாரிக்கப்பட்ட மதிப்பீடு தொகை ரூ.1,30,000/– இலட்சத்திற்கு பணியினை நகராட்சி குடிநீர் மற்றும் வடிகால் நிதியில் பணி மேற்கொள்ள நகரமன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:–**

**அனுமதி வழங்கலாம்.**

8. உதகமண்டலம் நகராட்சி அலுவலகத்தில் அலுவலக பயன்பாட்டிற்கு தேவையான டேபிள், சேர்கள் வாங்குவதற்கு தயாரிக்கப்பட்ட உத்தேச மதிப்பீடு தொகை ரூ.2.45/– இலட்சத்திற்கு பணியினை நகராட்சி பொது நிதியில் பணி மேற்கொள்ள அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:–**

**அனுமதி வழங்கலாம்.**

9. உதகமண்டலம் நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்.21ல் மாரியம்மன் கோயில் பின்புறம் உள்ள பொதுக் கழிவறையில் Water Closet, கதவு, தரைத் தளம் Sintex Tank மற்றும்

குழாய்கள் பழுதடைந்துள்ளதால் கழிவறையில் தண்ணீர் இல்லாமலும் Water Closet உடைந்து உள்ளதாலும் இப்பகுதி பொதுமக்கள் கழிவறையை பயன்படுத்த இயலாத சூழ்நிலையில் உள்ளனர். இப்பகுதியில் சுகாதார சீர்கேடு ஏற்படும் சூழ்நிலை உள்ளது. எனவே பொது மக்கள் நலன்கருதி மேற்கண்ட இடத்தில் பழுதடைந்துள்ள கழிவறையை சீரமைக்க தயாரிக்கப்பட்ட மதிப்பீடு தொகை ரூ.2.50/– இலட்சத்திற்கு பணியினை நகராட்சி குடிநீர் மற்றும் வடிகால் நிதியில் பணி மேற்கொள்ள நகரமன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:–**

**அனுமதி வழங்கலாம்.**

**10.** உதகமண்டலம் நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்.21ல் ராஜா லாட்ஸ் அருகில் உள்ள பொதுக் கழிப்பிடம் மிகவும் பழுதடைந்துள்ளது. மேலும் Sintex tank மற்றும் குழாய்கள் பழுதடைந்துள்ளதால் மேற்கண்ட கழிவறையை பொதுமக்கள் பயன்படுத்த இயலாத சூழ்நிலை உள்ளது. எனவே பொதுமக்கள் நலன் கருதி பழுதடைந்துள்ள பாதாள சாக்கடை தொட்டி மற்றும் குழாய்களை மாற்றியமைக்கவும் மேலும் கழிவறையில் பழுதடைந்துள்ள water closet, தரைதளம், கதவு ஆகியவற்றினை சீரமைத்து பணி மேற்கொள்ள தயாரிக்கப்பட்ட உத்தேச மதிப்பீடு தொகை ரூ.1.80/– இலட்சத்திற்கு பணியினை நகராட்சி குடிநீர் மற்றும் வடிகால் நிதியில் பணி மேற்கொள்ள நகர மன்ற அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:–**

**அனுமதி வழங்கலாம்.**

**11.** நகராட்சி எல்லைக்குட்பட்ட அப்பர் தொட்டபெட்டா, டைகர் ஹில் மற்றும் லோயர் தொட்டபெட்டா ஆகிய மூன்று நீர் தேக்கங்களில் இருந்தும் நகர் பகுதிகளுக்கு குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. தற்பொழுது அப்பகுதியில் இரவு காவலர்கள் தங்குவதற்கான கட்டிடம் ஏற்கனவே நகராட்சி மூலம் அமைக்கப்பட்டுள்ளது. தற்பொழுது அக்கட்டிடம் பராமரிக்கப்படாமல் உள்ளதால் காவலர்கள் தங்க இயலுவதில்லை. எனவே அக்கட்டிடத்தினை பராமரிக்க தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டு தொகை **ரூ.6,50,000/–** க்கு அனுமதி வேண்டப்படுகிறது. மேற்கண்ட பணி அவசிய பணியாக உள்ளதால் நகராட்சி பொதுநிதியில் மேற்கொள்ளவும் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :-**

**அனுமதி வழங்கலாம்.**

12. நகராட்சி எல்லைக்குட்பட்ட காந்தல் புதுநகர் சேன்ராக் லைனில் உள்ள ஹாலிவுட் காம்பவுண்ட் கேட்டிலிருந்து துளசி அம்மா வீடு வரை பாதாள சாக்கடை மற்றும் சாலை பழுதடைந்துள்ளதால் பொதுமக்கள் செல்வதற்கு பாதிப்பு ஏற்படுகிறது. மற்றும் கழிவுநீர் அனைத்தும் சாலையின் மேற்புறத்தில் செல்கிறது. அதனால் அப்பகுதியில் சுகாதார சீர்கேடு ஏற்படுகிறது. எனவே பொதுமக்கள் நலன் கருதி அப்பகுதியில் பாதாள சாக்கடை குழாய்கள் மற்றும் மேன்ஹோல்கள் சீர் செய்ய தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டு தொகை ரூ.9,75,000/– க்கு அனுமதி வேண்டப்படுகிறது. மேற்கண்ட பணி அவசிய பணியாக உள்ளதால் நகராட்சி பொதுநிதியில் மேற்கொள்ளவும் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :-**

**அனுமதி வழங்கலாம்.**

13. நகராட்சி எல்லைக்குட்பட்ட மாண்டிரோசா காலனி பகுதியில் ஊற்று அதிகம் விடுவதால் சாலையின் மேற்புறத்தில் சென்று அருகில் உள்ள வீடுகளுக்கு பாதிப்பு ஏற்படுகிறமு. மற்றும் தற்பொழுது பருவமழை அதிகமாக பெய்து விடுவதாலும் அதிகமான நீர் ஊற்றுகள் ஏற்பட்டுள்ளது. எனவே சாலையின் மேற்புறத்தில் செல்லாமல் அத்தண்ணீரை கல்வொ்ட் மூலமாக செல்ல தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டு தொகை ரூ.9,75,000/– க்கு அனுமதி வேண்டப்படுகிறது. மேற்கண்ட பணி அவசிய பணியாக உள்ளதால் நகராட்சி பொதுநிதியில் மேற்கொள்ளவும் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :-**

**அனுமதி வழங்கலாம்.**

14. நகராட்சி எல்லைக்குட்பட்ட 9வது வார்டில் உள்ள நேதாஜி நகர் பகுதியில் உள்ள நடைபாதை மிகவும் பழுதடைந்து உள்ளதால் பொதுமக்கள் செல்வதற்கு பாதிப்பு ஏற்படுகிறது. மற்றும் அப்பகுதியில் போதிய நடைபாதை வசதி இல்லாத காரணத்தினால் மழைகாலங்களில் செல்வதற்கும் பாதிப்பு ஏற்படுகிறது. எனவே பொதுமக்கள் நலன் கருதி அந்நடைபாதை சீர் செய்ய தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டு தொகை ரூ.8,00,000/– க்கு அனுமதி வேண்டப்படுகிறது. மேற்கண்ட பணி அவசிய பணியாக உள்ளதால் நகராட்சி பொதுநிதியில் மேற்கொள்ளவும் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :-**

**அனுமதி வழங்கலாம்.**

**15.** நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்.32ல் உள்ள நொண்டிமேடு பகுதியில் குப்பம்மா வீடு முதல் பாபு வீடு வரை உள்ள பாதாள சாக்கடை குழாய்கள் மிகவும் பழுதடைந்து உள்ளதால் கழிவுநீர் அனைத்தும் நடைபாதையின் மேற்புறத்தில் செல்வதால் பொதுமக்கள் செல்வதற்கு பாதிப்பு ஏற்படுகிறது. எனவே பொதுமக்கள் நலன் கருதி பழுதடைந்த பாதாள சாக்கடை குழாய்கள் மற்றும் மேன்ஹோல்கள் மாற்றி அமைக்க தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டு தொகை ரூ.7,00,000/–க்கு அனுமதி வேண்டப்படுகிறது. மேற்கண்ட பணி அவசிய பணியாக உள்ளதால் நகராட்சி குடிநீர் மற்றும் வடிகால் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :-**

**அனுமதி வழங்கலாம்.**

**16.** நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்.7ல் விவேகாநந்தா நகர் பகுதியில் உள்ள முனீஸ்வரர் கோவில் செல்லும் படிகட்டுகள் மிகவும் பழுதடைந்து உள்ளதால் பொதுமக்கள் செல்வதற்கும் பாதிப்பு ஏற்படுகிறது. மற்றும் மழைகாலங்களில் பொதுமக்கள் அச்சாலையின் வழியாக செல்வதற்கும் பாதிப்பு ஏற்படுகிறது. தற்பொழுது அப்பகுதி மக்களுக்கு அந்நடைபாதை தவிர மாற்று நடைபாதை கிடையாது. எனவே பொதுமக்கள் நலன் கருதி அப்பதியில் உள்ள பழுதடைந்த நடைபாதையை சீர் செய்ய தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டு தொகை ரூ.7,50,000/– க்கு அனுமதி வேண்டப்படுகிறது. மேற்கண்ட பணி அவசிய பணியாக உள்ளதால் நகராட்சி பொதுநிதியில் மேற்கொள்ளவும் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :-**

**அனுமதி வழங்கலாம்.**

**17.** நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்.35ல் உள்ள மஞ்சனகொரை புதுலைன் பகுதியில் உள்ள நடைபாதை மிகவும் பழுதடைந்து பொதுமக்கள் செல்வதற்கு பாதிப்பு ஏற்படுகிறது. எனவே அப்பகுதியில் மழைகாலங்களில் பொதுமக்கள் செல்ல இயலுவதில்லை. தற்பொழுது பருவமழை தொடர்ந்து பெய்து வருவதால் மீண்டும் நடைபாதைக்கு பாதிப்பு ஏற்படுகிறது. எனவே பொதுமக்கள் நலன் கருதி அந்நடைபாதை சீர் செய்ய தயாரிக்கப்பட்ட மதிப்பீடு தொகை ரூ.7,00,000/– க்கு அனுமதி வேண்டப்படுகிறது. மேற்கண்ட பணி அவசிய பணியாக உள்ளதால் நகராட்சி பொதுநிதியில் மேற்கொள்ளவும் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :-**

**அனுமதி வழங்கலாம்.**

**18.** மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் நடத்திய சாலை பாதுகாப்பு ஆய்வு கூட்டத்தில் கடந்த நாட்களில் பெய்த மழையின் காரணமாக படகு இல்லம் செல்லும் சாலையில் ரயில்வே பாலம் அடியில் உள்ள சாலை மிகவும் பழுதடைந்து வாகனங்கள் செல்வதற்கு பாதிப்பு ஏற்படுகிறது. மற்றும் மழைகாலங்களில் மழைநீர் தேங்கி நிற்கிறது. அச்சாலையை சீர் செய்ய கோரியுள்ளார்கள். எனவே அச்சாலை வழியாக அதிகமான சுற்றுலா பயணிகள் வருவதாலும் பேருந்துகள் செல்வதாலும் பாதிப்பு ஏற்படுகிறமு. எனவே பொதுமக்கள் நலன் கருதி அச்சாலையில் பேவர் பிளாக் கற்கள் மூலம் சாலை அமைக்க தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டு தொகை ரூ.5.00 லட்சத்திற்கு அனுமதி வேண்டப்படுகிறது. மேற்கண்ட பணி அவசிய பணியாக உள்ளதால் நகராட்சி பொதுநிதியில் மேற்கொள்ளவும் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :-**

**அனுமதி வழங்கலாம்.**

**19.** மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் நடத்திய சாலை பாதுகாப்பு ஆய்வு கூட்டத்தில் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அவர்களின் கடித எண்.CNO/X/SB/2022 நாள்.28/11/2022–ல் நகராட்சி எல்லைக்குட்பட்ட பிங்கர்போஸ்ட் முதல் காந்தல் சாலை முக்கோணம் வழியாக கஸ்தூரி பாய் காலனி சந்திப்பு வரையிலும் மற்றும் பீட்டன்ஸ் சாலை, நார்த்லேக் சாலை ஆகிய சாலைகளில் பள்ளங்கள் அதிகமாக உள்ளதால் வாகனங்கள் செல்வதற்கு பாதிப்பு ஏற்படுகிறது. மற்றம் அச்சாலைகளில் அதிகமான பேருந்துகள் செல்வதாலும் நகர் பகுதிக்கு சுற்றுலா பயணிகள் வருவதாலும் சாலைகளை சீர் செய்ய கோரியுள்ளார்கள். எனவே மேற்கண்ட சாலைகளுக்கு BT தார் ஒட்டும் பணி (BT Patchwork) செய்ய தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டு தொகை ரூ.17.00 லட்சத்திற்கு அனுமதி வேண்டப்படுகிறது. மேற்கண்ட பணி அவசிய பணியாக உள்ளதால் நகராட்சி பொதுநிதியில் மேற்கொள்ளவும் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :-**

**அனுமதி வழங்கலாம்.**

**20.** இந்நகராட்சியில் தற்பொழுது உரக்கிடங்கில் இயக்கி கொண்டு இருக்கும் TN 43 E 1215 (JCB) வாகனத்தின் நான்கு டயர்கள் மிகவும் பழுதடைந்த நிலையில் உள்ளதால் மேற்படி வாகனத்தினை இயக்க முடியாத நிலையில் உள்ளது. மேலும், குப்பைகளை அகற்ற முடியாத நிலை ஏற்படுகிறது. 36 வார்டுகளிலும் திடக்கழிவு பணிகள் செய்ய முடியாத சூழ்நிலை ஏற்படுகிறது. எனவே, TN 43 E 1215 (JCB)

வாகனத்திற்கு நான்கு புதிய டயர்கள் கொள்முதல் செய்ய தோராய மதிப்பீடு தொகை ரூ. 2,25,000/– அனுமதியும் பணிக்கான செலவினத்திற்கு பொது நிதியில் மேற்கொள்ள அவசர அவசியம் கருதி முன் அனுமதி வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.,

**அலுவலக குறிப்பு–**

அனுமதி வழங்கலாம்.

முன் அனுமதிக்காகவும் மன்றம் அனுமதிக்காகவும்.

21. இந்நகராட்சியில் பொது சுகாதார நல பிரிவில் இயங்கி வரும் TN 43 E 1215 JCB (உரக்கிடங்கு) வாகனத்திற்கு பழுது மற்றும் பராமரிப்பு பணிகளை மேற்கொள்ள வேண்டி இருப்பதால் அரசு அங்கீகரிக்கப்பட்ட பணிமனை நிறுவனத்திற்கு மேற்கண்ட பழுது மற்றும் பராமரிப்பு பணிகளை மேற்படி தயார் செய்யப்பட்ட தோராய மதிப்பீடு ரூ.4,00,000/–க்கு அனுமதியும் பணிக்கான செலவினத்திற்கு இந்நகராட்சி வருவாய் மற்றும் மூல நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அவர்களின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு.**

**அனுமதி வழங்கலாம்.**

22. உதகமண்டலம் நகராட்சி எல்லைக்குட்பட்ட நகராட்சி பொறியாளர் குடியிருப்பு உட்பட சுவர்கள் மற்றும் வெளிப்புற சுவர்கள் மிகவும் பழுதடைந்துள்ளதால் சுவற்றிற்கு பட்டி போட்டு சுவற்றினை சீரமைத்து வர்ணம் பூசவும் பழைய கதவு ஜன்னல்களுக்கு வர்ணம் பூசி புதுப்பித்து பழுதடைந்துள்ள தரை விரிப்பு சீரமைக்கவும் தயாரிக்கப்பட்ட உத்தேச செலவினம் ரூ.2.75/– இலட்சத்திற்கு பணியினை நகராட்சி பொது நிதியில் பணி மேற்கொள்ள நகரமன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு.**

**அனுமதி வழங்கலாம்.**

23. உதகமண்டலம் நகராட்சி எல்லைக்குட்பட்ட சர்ச்ஹில் பகுதியில் ராஜேந்திரன் வீடு அருகில் நடைபாதை மிகவும் பழுதடைந்துள்ளதால் மேற்கண்ட நடைபாதையை சீரமைத்து தரும்படி நகரமன்ற உறுப்பினர் அவர்கள் கோரிக்கை விடுத்துள்ளதன் பேரில் இடம் நேரில் ஆய்வு மேற்கொண்டு தயாரிக்கப்பட்ட மதிப்பீடு தொகை ரூ.6.80/–. இலட்சத்திற்கு பணியினை நகராட்சி பொது நிதியில் பணி மேற்கொள்ள நகரமன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு.**

**அனுமதி வழங்கலாம்.**

24. உதகமண்டலம் நகராட்சி எல்லைக்குட்பட்ட கால்நடை மருத்துவமனை சாலையில் உள்ள குடியிருப்பு பகுதியில் மண்சரிவு ஏற்பட்டுள்ளதால் மேற்கண்ட இடத்தில் தடுப்பு சுவர், மேலும் இப்பகுதியில் பழுதடைந்துள்ள கழிவுநீர் தொட்டிகள், குழாய்கள் மற்றும் நடைபாதையினை சீரமைத்து தரும்படி நகரமன்ற ஆய்வு செய்யப்பட்டு தடுப்புசுவர், கழிவுநீர் குழாய்கள் மற்றும் பணிகள் மேற்கொள்ள ஆகும் உத்தேச செலவினம் ரூ.2.90/– இலட்சத்திற்கு பணியினை நகராட்சி குடிநீர் மற்றும் வடிகால் நிதியில் பணி மேற்கொள்ள நகரமன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு.

அனுமதி வழங்கலாம்.

25. உதகமண்டலம் நகராட்சியில் தீட்டுக்கல் உரக்கிடங்கில் அமைந்துள்ள பொதுக் கழிவறையில் Water Closet மற்றும் தரைதளம் உடைந்துள்ளது. மேலும் கழிவுநீர் செல்லும் சேனலின் RCC Precast Slab அனைத்தும் உடைந்து பயன்படுத்த இயலாத நிலையில் உள்ளது. சின்டெக்ஸ் டேங்க் மற்றும் கழிவறைக்கு தண்ணீர் விநியோகம் செய்யும் பகிர்மான குழாய் பழுதடைந்துள்ளது. தீட்டுக்கல் உரக்கிடங்கில் Bio Minning பணி மேற்கொள்வதால் இங்கு 15 நபர்கள் மற்றும் இயந்திர அறையில் Ingenerator இயக்கவும், மேலும் பிளாஸ்டிக்கை தரம் பிரித்து Bailing செய்யும் பணிகளுக்காக சுமார் 30 நபர்கள் மொத்தம் 45 நபர்கள் பணி மேற்கொண்டு வருகின்றனர். எனவே இங்கு பணியாற்றும் பணியாளர்கள் பொதுக்கழிவறையை பயன்படுத்த இயலாத சூழ்நிலை உள்ளனர். எனவே பொது மக்கள் நலன் கருதிட பழுதடைந்துள்ள பொதுக்கழிவறையை பழுது நீக்கம் செய்து சுவற்றிற்கு வர்ணம் பூசி புதுப்பிக்க தயாரிக்கப்பட்ட உத்தேச மதிப்பீடு தொகை ரூ.1.95/– இலட்சத்திற்கு பணியினை நகராட்சி குடிநீர் மற்றும் வடிகால் நிதியில் பணி மேற்கொள்ள நகரமன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு.

அனுமதி வழங்கலாம்.

26. இந்நகராட்சிக்கு சொந்தமான ஆடு, மாடு வதை சாலைக்கு கடந்த 16/12/2022 அன்று பொது ஏலம்/ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டதில் கீழ்க்கண்ட ஒரே ஒரு நபர் மட்டும் பொது ஏலம் கோரியுள்ளார்.

| வ. எண் | ஏலம் கோரும் இனம் | ஏலதாரர் பெயர் மற்றும் முகவரி | ஏலக் கேள்வித் தொகை | குறிப்பு |
|---|---|---|---|---|
| 1. | 2. | 3. | 4. | 5. |

| | | | | |
|---|---|---|---|---|
| 1 | ஆடு, மாடு வதை சாலை | திரு.பி. லூர்து சாமி, 41B ஹில்வியு, மேரிஸ் ஹில், உதகை | ரூ. 3,49,000/– | திரு.பி. லூர்து சாமி, 41B ஹில்வியு, மேரிஸ் ஹில், உதகை.<br><br>**உயர்ந்த பட்ச் ஏலக் கேள்வித் தொகையாக ரூ.3,49,000/– கோரியுள்ளார்** |

மேற்படி ஆடு, மாடு வதைசாலைக்கு பல முறை ஏலம் / ஒப்பந்தப்புள்ளிகள் கோரியும் ஒருவரும் ஏலம் கோர முன்வராத நிலையில் தற்போது திரு.பி. லூர்து சாமி, 41B ஹில்வியு, மேரிஸ் ஹில், உதகை அவர்கள் மட்டுமே உயர்ந்த பட்ச ஏலக் கேள்வித் தொகையாக ரூ3,49,000/– கோரியுள்ளார். இத்தொகையானது சொன்றாண்டு குத்தகை தொகையை காட்டிலும் 15% கூடுதல் என்பதால் இதனை எற்பது குறித்து மன்றத்தின் அனுமதிக்கு.

அலுவலக குறிப்பு

**ஆடு, மாடு வதை சாலைக்கு இதுவரை 14 (பதினான்கு) முறை ஏலம் / ஒப்பந்தப்புள்ளிகள் கோரியும் ஒருவரும் ஏலம் கோர முன் வராத நிலையில், தற்போது திரு.பி. லூர்து சாமி, 41B ஹில்வியு, மேரிஸ் ஹில், உதகை அவர்கள் மட்டும் உயர்ந்தபட்ச ஏலத் தொகை ரூ.3,49,000/–ஐ கோரியுள்ளார். இந்த உயர்ந்த பட்ச ஏலத் தொகையானது சொன்றாண்டு குத்தகை தொகையை காட்டிலும் 15% கூடுதல் என்பதால் இதனை மன்றம் ஏற்கலாம்.**

27. இந்நகராட்சிக்கு சொந்தமான சந்தை உட்புறம் மற்றும் வெளிப்புறம் உள்ள கடைகளில் வாடகை தொகை செலுத்தாத காரணத்தினால் பூட்டி சீல் வைக்கப்பட்ட கடைகளில் ஏலம் கோரப்பட்ட கடைகள்போக எஞ்சியுள்ள 81 கடைகளுக்கு 09/12/2022 அன்று பொது ஏலம் / ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டதில் கீழ்காணும் விபரம் படி ஒரே ஒரு கடை மட்டும் பொது ஏலம் கோரப்பட்டுள்ளது.

| **வ. எண்.** | **அமைவிடம்** | **கடை எண்.** | **கடையின் வ.வி.எண்.** | **ஏலதாரர் பெயர் மற்றும் முகவரி** | **ஏலம் கோரப்பட்ட தொகை** | **குறிப்பு** |
|---|---|---|---|---|---|---|
| **1** | **2** | **3** | **4** | **5** | **6** | **7** |
| 1 | சந்தை உட்புறம் | 23/52 | 068/1559 | திரு.எஸ். அப்துல் சுபான், 64/23 மேல் போகி தெரு, காந்தல், உதகமண்டலம். | ரூ.13,100/– | உயர்ந்த பட்ச ஏலத் தொகை ரூ.13,100/–<br><br>திரு.எஸ். அப்துல் சுபான், 64/23 மேல் போகி தெரு, காந்தல், |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | | | | | | உதகமண்டலம். |

மேற்கண்ட கடைக்கு பல முறை ஏலம் / ஒப்பந்தப்புள்ளி கோரியும் ஒருவரும் பங்கேற்காத நிலையில் தற்போது ஒரே ஒரு நபர் மட்டும் பொது ஏலத்தில் கலந்து கொண்டு ஏலம் கோரியுள்ளார். இதில் திரு.எஸ். அப்துல் சுபான், 64/23 மேல் போகி தெரு, காந்தல், உதகமண்டலம் அவர்கள் நகராட்சியால் நிர்ணயம் செய்யப்பட்ட மாத வாடகை தொகையை காட்டிலும் கூடுதலான தொகைக்கு, உயர்ந்த பட்ச ஏல தொகையாக ரூ.13,100/— கோரியுள்ளர். எனவே திரு.எஸ்.அப்துல் சுபான், 64/23 மேல் போகி தெரு, காந்தல், உதகமண்டலம்அவர்களின் உயர்ந்த பட்ச ஏலத் தொகையை ஏற்பது குறித்து மன்றத்தின் அனுமதிக்கு.

**அலுவலக குறிப்பு**

**மேற்படி கடைக்கு இதுவரை 18 (பதினெட்டு) முறை ஏலம் / ஒப்பந்தப்புள்ளிகள் கோரியும் ஒருவரும் ஏலம் கோர முன் வராத நிலையில், தற்போது திரு.எஸ். அப்துல் சுபான், 64/23 மேல் போகி தெரு, காந்தல், உதகமண்டலம் அவர்கள் மட்டும் உயர்ந்தபட்ச ஏலத் தொகை ரூ.13,100/—ஐ ஏலத் தொகையாக கோரியுள்ளார் இதனை மன்றம் ஏற்கலாம்.**

28. இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட கார்டன் சாலையில் சாலையோர வியாபாரிகள் கடை நடத்துவதற்கும் ஆட்லி சாலையில் சாலையோர வியாபாரிகள் கடை நடத்துவதற்கும் கணக்கெடுப்பு பணி செய்யப்பட்டதில் ஆட்லி சாலையில் சாலையோர வியாபாரிகள் அடையாள அட்டைதாரர்கள் மொத்தம் 17 நபரும் கார்டன் சாலையில் அடையாள அட்டைதாரர்கள் மொத்தம் 19 நபரும் உள்ளனர். எனவே மேற்படி இடத்தில் சாலையோர வியாபாரிகளுக்கான கடை அமைக்கப்பட்டுள்ளதால் அதற்கான ஏலம் விடுவதற்கு ஏற்கனவே உள்ள அடையாள அட்டைதாரர்களுக்கு முதலில் முன்னுரிமை வழங்கவும் மீதமுள்ள கடைகளுக்கு பொது ஏலம் விடவும் மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு.**

**அனுமதி வழங்கலாம்.**

29. உதகமண்டலம் நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்.19ல் அடையார் ஆனந்தபவன் பின்புறம் பாதாள சாக்கடை குழாய்கள் மிகவும் பழுதடைந்துள்ளதால் கழிவுநீர் வீடுகளின் முன்புறம் தேங்கி நிற்கிறது. இதனால் இப்பகுதியில் சுகாதார சீர்கேடு ஏற்படும் சூழ்நிலை உள்ளது. எனவே பொதுமக்கள் நலன் கருதி பழுதடைந்துள்ள கழிவுநீர் குழாய்கள்

மற்றும் தொட்களை சீரமைக்க தயாரிக்கப்பட்ட உத்தேச மதிப்பீடு தொகை ரூ.4.90/– இலட்சத்திற்கு பணியினை நகராட்சி குடிநீர் மற்றும் வடிகால் நிதியிலிருந்து மேற்கொள்ள நகரமன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :-**

**அனுமதி வழங்கலாம்.**

**30.** உதகமண்டலம் நகராட்சி அலுவலகம் கட்டிடத்தில் எரியாமல் பழுதடைந்துள்ள டியூப்லைட் பிட்டிங்குகள் மற்றும் நகராட்சி எல்லைக்குட்பட்ட **36** வார்டுகளில் பொருத்தப்பட்டுள்ள தெருவிளக்கு சுவிட்ச் பாக்ஸ்–களில் பழுதடைந்துள்ள ஒயர் மற்றும் Fuse carrier – களை புதுப்பித்து, தெருவிளக்குகளை சீராக ஒளிரச் செய்யும் பொருட்டு 20W LED Tube light fittings, 7/20 Aluminium Wire, 3/20 Aluminium Wire, 1/8 PVC Copper Wire, 100 Amps fuse carrier, 63 Amps fuse carrier, Single Pole 20 Amps MCB, Single pole 16 Amps MCB மற்றும் Insulation tape ஆகியவற்றை வாங்கி இருப்பில் வைத்து உபயோகிக்கும் பணிக்கு தயாரிக்கப்பட்ட மதிப்பீடு தொகை ரூ.**3.20/–** இலட்சத்திற்கு பணி மேற்கொள்ள நகர மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :-**

**அனுமதி வழங்கலாம்.**

**31.** உதகமண்டலம் நகராட்சி எல்லைக்குட்பட்ட காந்தல் முக்கோணம் பகுதியில் அமைந்துள்ள கழிவுநீரேற்றம் நிலையத்தில் உள்ள மின் மோட்டார்களை இயக்கவும் Panel board, NRV valve ஆகியவற்றை பராமரிக்கவும் ரூ.**3.00** இலட்சம் மதிப்பீட்டில் **01.03.2021** முதல் **28.02.2022** வரை நகரமன்ற தீர்மான எண்.**2451/25.01.2021** ல் அனுமதி பெறப்பட்டு ஒப்பந்ததாரர் M/S Sam Electricals மூலம் ஒப்பந்த அடிப்படையில் ஒரு மின்கம்பி உதவியாளர் (Ele-Helper) மூலம் ரூ.**3.00** இலட்சத்திற்கு பணி மேற்கொள்ளப்பட்டது. மேலும் **01.03.2022** முதல் **31.08.2022** வரை **6** மாத காலத்திற்கு ரூ.**1.50** இலட்சம் மதிப்பீட்டில் ஏற்கனவே உள்ள மின் கம்பி உதவியாளர் மூலம் பணி மேற்கொள்ள அனுமதி பெறப்பட்டுள்ளது.

மேற்படி கருத்துருக்களின் அடிப்படையில் குறைந்தப்பட்ச தினசரி கூலி நிர்ணயம் செய்து உரிய உத்தரவு நாளது தேதி வரை வரப்பெறாத காரணத்தினால் உத்தரவு பெறப்படும் வரை காந்தல் கழிவு நீரேற்றும் நிலையத்தில் ஒப்பந்தப் பணியாளர் மின்கம்பி உதவியாளர் மூலம்

பணி மேற்கொள்ள 01.09.2022 முதல் 28.02.2023 வரை 6 மாத காலத்திற்கு அனுமதி வேண்டப்படுகிறது. எனவே பணியின் அவசர அவசியம் கருதியும் நிர்வாக நலன் கருதியும் அடுத்து ஒப்பந்தப்புள்ளி கோரி தனியார் நிறுவனத்திற்கு பணி உத்தரவு வழங்ககம் வரை தற்பொழுது பணி செய்து வரும் மேற்படி தனியார் நிறுவனத்திற்கு பணி உத்தரவினை ஏற்கனவே வழங்கி வரும் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் அங்கீகரித்துள்ள விலை விகித்திலேயே (ஒப்பந்தப்புள்ளி கோரிய தொகையிலேயே) தொடர்ந்து மேற்கொள்ள 7 மாத கால நீட்டிப்பு செய்து வழங்கவும், மேற்கண்ட பணிகளுக்கு ஆகும் உத்தேச செலவினம் ரூ.1.50 /– இலட்சத்திற்கு நகர மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு :-

அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண். இ5/1077/2020–2021)

32. உதகமண்டலம் நகராட்சி எல்லைக்குட்பட்ட கழிவு நீரேற்றும் நிலையத்தில் உள்ள மின்கார்டன் மற்றும் காந்தல் சுத்திகரிப்பு நிலையத்தில் உள்ள மின் மோட்டார்களை இயக்கவும் பேனல் போர்டுகள் இயக்கவும், பராமரிக்கவும் நகரமன்ற தீர்மான எண்.2471/09.02.2021, 2643/30.06.2021 மற்றும் 52/24.03.2022 ல் அனுமதி பெறப்பட்டு 01.07.2021 ல் திருவாளர் பிளசன் குரூப் (M/S Blesson group) உதகை அவர்களுக்கு பணி உத்தரவு வழங்கப்பட்டுள்ளது.

நகராட்சி நிர்வாக இயக்குனர், சென்னை அவர்களின் ஆய்வு கூட்டங்கள் மற்றும் சுற்றறிக்கைகளில் தெரிவித்துள்ளதற்கிணங்கவும், ஆணையாளர் அவர்களின் தமிழ்நாட்டில் உள்ள ஒவ்வொரு நகராட்சிகளிலும் தனியார் வெளிக்கொணர்வு நிறுவன ஒப்பந்தப் பணியாளர்களுக்கு வழங்கப்படும் தினசரி கூலியானது வெவ்வேறு தொகையாக உள்ளதினாலும் தமிழ்நாடு முழுவதும் உள்ள நகராட்சிகளில் ஒரே மாதிரியான அடிப்படை தினசரி கூயி விலை விகிதம் நிர்ணயம் செய்யும் பொருட்டு கோரிய கருத்துருக்கள் நகராட்சி நிர்வாக இயக்குனர், சென்னை அவர்களுக்கு அனுப்பப்பட்டுள்ளது.

மேற்படி கருத்துருக்களின் அடிப்படையில் குறைந்த பட் தினசரி கூலி நிர்ணம் செய்து உரிய உத்தரவு நாளது தேதி வரை வரப்பெறாத காரணத்தினாலும், உத்தரவி பெறப்படும் வரை மினி கார்டன் கழிவுநீரேற்றும் நிலையத்தில் Wireman Garde II – 1 No மற்றும் Electrical Helper – 1 No மேலும் காந்தல் கழிவுநீர் சுத்தகரிப்பு நிலையத்தில் Wireman Gr II -1 No மற்றும் Electrical Helper – 1 No மூலம் பணி மேற்கொள்ள 6 மாதத்திற்கு அனுமதி வேண்டப்படுகிறது. எனவே பணியின் அவசரம் மற்றும் அவசியம் கருதியும் அடுத்து

ஒப்பந்தப்புள்ளி கோரி தனியார் நிறுவனத்திற்கு பணி உத்தரவினை வழங்கும் வரை ஏற்கனவே பணி உத்தரவு வழங்கப்பட்ட ஒப்பந்ததரரின் மூலம் வழங்கப்பட்டு வரும் பணியாளர்கள் மூலம் ஏற்கனவே மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் அங்கீகரித்துள்ள விரை விகித்திலேயே ( ஒப்பந்தப்புள்ளி கோரிய தொகையிலேயே) தொடர்ந்து பணி மேற்கொள்ள 01.09.2022 முதல் 28.02.2023 வரை 6 மாத காலம் காலநீட்டிக்கு செய்து வழங்கவும், மேற்காணும் பணிக்காகும் உத்தேச செலவினம் ரூ.7.00 இலட்சத்திற்கு பணி மேற்கொள்ள நகரமன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :-**

**அனுமதி வழங்கலாம்.**

33. உதகமண்டலம் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.8ல் கருப்பு மண் ஓலைப் பகுதியில் பழுதடைந்த நகராட்சி பொதுக்கழிப்பிடம் பழுதடைந்து அதன் கதவுகள் ஜன்னல் சுவர்கள் ஆகியவை பழுதடைந்து இருப்பதால், இரவு நேரங்கல் வனவிலங்குகள் இப்பகுதிக்கு குடிபெயருகின்றன. எனவே மேற்கண்ட பகுதியில் உள்ள பொதுமக்களின் சுபநிகழ்ச்சிகள் நடத்த சமுதாய கூடம் இல்லாததால் மேற்கண்ட பராமரிப்பு இல்லாத கழிப்பிடத்தை இடித்து அகற்றிவிட்டு அந்த இடத்தில் பொது மக்களின் பயன்பாட்டிற்கு சமுதாயகூடம் அமைக்க தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டுத் தொகை ரூ.20.00/—இலட்சத்திற்கு நகராட்சி வருவாய் நிதியில் பணி செய்ய நகர்மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :-**

**அனுமதி வழங்கலாம்.**

34. உதகமண்டலம் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.8ல் தோப்பன் லைன் இடத்தில் கடந்த சில மாதத்திற்கு முன்பு பெய்த கனமழையினால் SFRC காலணி முதல் பிங்கர்போஸ்ட் வரை சாலையின் இருபுறங்களிலும் மழையினால் அரிப்பு ஏற்பட்டு கான்கிரீட் பாதையானது மிகவும் மோசமானதாகி இருப்பதால் பொது மக்கள் மற்றும் பள்ளி மாணவ மாணவிகள் நடந்து செய்ய மிகவும் சிரம்மப்படுகின்றனர். எனவே மேற்கண்ட சாலையின் ஓரத்தில் மழையினால் பழுதடைந்த கான்கிரீட் சாலைக்கு பதிலாக புதிதாக கான்கிரீட் சாலை அமைக்க வேண்டியது மிகவும் அவசியம் ஆகிறது. எனவே இதற்காக தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டுத் தொகை ரூ.8.80/— இலட்சத்திற்கு நகராட்சி வருவாய் நிதியில் பணி செய்ய நகர்மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :-**

**அனுமதி வழங்கலாம்.**

35. உதகமண்டலம் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.17, கிரீன் பீல்டு பகுதியில் இருந்து SRVS பள்ளி முதல் சந்திரா டிப்போ வரை உள்ள மேன்ஹோல் மற்றும் பைப்லைன் ஆனது பழுதடைந்து உள்ளதால், கழிவுநீர் ஆனது மேன்ஹோல் மற்றும் பைப்லைன் வழியாக செல்லாமல் அருகில் உள்ள மழைநீர்க் கால்வாயில் செல்கிறது. இதனால் அப்பகுதியில் துர்நாற்றம் வீசுவதுடன் நோய் தொற்றும் அபாயமும் ஏற்படும். எனவே மேற்கண்ட இடத்தில் பழுதடைந்த பாதாள சாக்கடை பைப்லைனை மாற்றி அமைக்க வேண்டியது மிகவுவும அவசியம் ஆகிறது. எனவே இதற்காக தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டுத் தொகை ரூ.8.50/— இலட்சத்திற்கு நகராட்சி வருவாய் நிதியில் பணி செய்ய நகர்மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :-**

**அனுமதி வழங்கலாம்.**

36. உதகமண்டலம் நகராட்சிக்கு உட்பட்ட வார்டு எண்.3, புதுமந்து ஆஞ்சநேயர் கோவில் செல்லும் தார்சாலை ஆனது கடந்த ஆகஸ்டு மாதம் பெய்த மழையினால் பழுதடைந்து குண்டும் குழியுமாக மாறியுள்ளது. இதனால் இச்சாலை வழியாக பள்ளி வாகனங்கள் ஆம்புலன்ஸ் வாகனங்கள் சென்று வர முடியாமல் மிகவும் சிரம்மப்படுகின்றனர். எனவே மேற்கண்ட பகுதியில் பொதுமக்களின் நலன் கருதி மேற்கண்ட பழுதடைந்த சாலையை புதிதாக புதுப்பிக்க தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டுத் தொகை ரூ.15.00/— இலட்சத்திற்கு நகராட்சி வருவாய் நிதியில் பணி செய்ய நகர்மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :-**

**அனுமதி வழங்கலாம்.**

37. உதகமண்டலம் நகராட்சிக்கு உட்பட்ட வார்டு எண்.2, கணபதி நகர் பகுதியில் சுமார் 100 குடும்பங்கள் வசித்து வருகின்றனர். இப்பகுதியில் உள்ள நடைபாதை ஆனது மண் நடைபாதை ஆக உள்ளதால் மழைக்காலங்களில் அப்பகுதி மக்கள் நடப்பதற்கு மிகவும் சிரம்மப்படுகின்றனர். எனவே மேற்கண்ட இடத்தில் உள்ள பொதுமக்களின் நலன் கருதி, மேற்கண்ட இடத்தில் உள்ள மண் நடைபாதையை சிமெண்ட் நடைபாதையாக மாற்றி அமைக்க வேண்டியது மிகவும் அவசியம் ஆகிறது. எனவே இதற்காக தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டுத் தொகை ரூ.9.25/— இலட்சத்திற்கு நகராட்சி வருவாய் நிதியில் பணி செய்ய நகர்மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :-**

**அனுமதி வழங்கலாம்.**

38. உதகமண்டலம் நகராட்சிக்கு உட்பட்ட வார்டு எண்.28, மணி லாட்ஜ் சாலையில் கடந்த ஆகஸ்டு மாதம் பெய்த மழையினால் மண் திட்டு சரிந்து விட்டது. இதனால் இச்சாலை வழியாக கனரக வாகனங்கள் செல்ல முடியாத நிலை ஏற்பட்டு உள்ளது. எனவே மேற்கண்ட சாலையில் மழையினால் பழுதடைந்த மண்திட்டு பகுதியில் கான்கிரீட் தடுப்புச் சுவர் அமைக்க வேண்டியது மிகவும் அவசியம் ஆகிறது. எனவே மேற்கண்ட இடத்தில் தடுப்புசுவர் அமைக்க தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டுத் தொகை ரூ.8.50/– இலட்சத்திற்கு நகராட்சி வருவாய் நிதியில் பணி செய்ய நகர்மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :-**

**அனுமதி வழங்கலாம்.**

39. உதகமண்டலம் நகராட்சிக்க உட்படட வார்டு எண்.29ல் உள்ள சன்ஷிதா மருத்துவமனை செல்லும் சாலையானது மழையினால் பழுதடைந்து குண்டும் குழியுமாக மாறி உள்ளது. இதனால் மருத்துவமனைக்கு செல்லும் நோயளிகள் மற்றும் அச்சாலை வழியாக செல்லும் இரு சக்கர வாகனங்கள் மற்றும் நான்னு சக்கர வாகனங்கள் செல்பவர் மிகவும் சிரம்மப்பட்டு செல்கின்றனர். எனவே மேற்கண்ட சாலையில் பழுதடைந்த குழிகளை தார் கலவை கொண்டு Patch Work செய்ய வேண்டியது மிகவும் அவசியம் ஆகிறது. எனவே இதற்காக தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டுத் தொகை ரூ.10.00/– இலட்சத்திற்கு நகராட்சி வருவாய் நிதியில் பணி செய்ய நகர்மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :-**

**அனுமதி வழங்கலாம்.**

40. உதகமண்டலம் நகராட்சிக்கு உட்பட்ட வார்டு எண்.29 கீரின்லேண்ட் பகுதியில் 75 குடும்பங்கள் வசித்து வருகின்றனர். இப்பகுதியில் வசிக்கும் பொதுமக்களுக்கு அப்பகுதியில் பாதாள மேன்ஹோல் மற்றும் பைப்லைன் இல்லாததால் அப்பகுதி பொதுமக்கள் மிகவும் சிரம்மப்பட்டு வருகின்றனத். மேற்கண்ட இடத்தில் புதிதாக பாதாளச் சாக்கடை அமைக்க தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டுத் தொகை ரூ.18.00 இலட்சத்திற்கு நகராட்சி பாதாளச் சாக்கடை நிதியில் செலவிட நகர்மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :-**

**அனுமதி வழங்கலாம்.**

41.உதகமண்டலம் நகராட்சிக்கு உட்பட்ட வார்டு எண்.5 கீழ்கோடப்பமந்து சாலையானது கடந்த ஆகஸ்டு மாதம் பெய்த மழையினால் பழுதடைந்து குண்டும் குழியுமாக மாறியுள்ளது.

இதனால் இச்சாலை வழியாக இருசக்கர வாகனத்தில் செல்பவர்கள் மற்றும் பள்ளி வாகனங்கள் சென்று வரமுடியாமல் மிகவும் சிரம்மப்படுகின்றனர். எனவே மேற்கண்ட இடத்தில் உள்ள சாலையில் உள்ள பள்ளங்களை தார் கலவை கொண்டு தார் ஒட்டும் பணி செய்ய வேண்டியது மிகவும் அவசியம் ஆகிறது. எனவே இதற்காக தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டுத் தொகை ரூ.10.00/– இலட்சத்திற்கு நகராட்சி வருவாய் நிதியில் பணி செய்ய நகர்மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :-**

**அனுமதி வழங்கலாம்.**

42. உதகமண்டலம் நகராட்சிக்கு உட்பட்ட வார்டு எண்.31 எல்க்ஹில் குமரன் நகர் பகுதியில் உள்ள மழைநீர்க் கால்வாய் ஆனது கடந்த ஆகஸ்டு மாதம் பெய்த மழையினால் பழுதடைந்து உள்ளது. இதனால் மழை நேரங்களில் மழைநீரனது கால்வாயில் செல்லாமல் அருகில் உள்ள வீடுகளுக்குள் சென்று விடுகிறது. எனவே மேற்கண்ட இடத்தில் பழுதடைந்த கால்வாய்யை புதிதாக அமைக்க தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டுத் தொனை ரூ.9.30/– இலட்சத்திற்கு நகராட்சி வருவாய் நிதியில் பணி செய்ய நகர்மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :-**

**அனுமதி வழங்கலாம்.**

43. உதகமண்டலம் நகராட்சிக்கு உட்பட்ட வார்டு எண்.31 எல்க்ஹில் குமரன் நகர் பகுதியில் ஜானி வீடு முதல் சாலை வரை உள்ள மழைநீர்க் கால்வாய் ஆனது பழுதடைந்து அதன் சுவர்கள் இடிந்தும் உள்ளதால் மழைக் காலங்களில் மழைநீர் ஆனது அருகில் உள்ள வீடுகளுக்குள் சென்று விடுகிறது. இதனால் அப்பகுதி மக்கள் மிகவும் சிரம்மப்படுகின்றனர். எனவே மேற்கண்ட இடத்தில் உள்ள பழுதடைந்து மழைநீர்க் கால்வாய்யை புதிதாக அமைக்க தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டுத் தொகை ரூ.9.00/– இலட்சத்திற்கு நகராட்சி வருவாய் நிதியில் பணி செய்ய நகர்மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :-**

**அனுமதி வழங்கலாம்.**

44. உதகமண்டலம் நகராட்சிக்கு உட்பட்ட வார்டு எண்.31 எல்க்ஹில் குமரன் நகர் பகுதியில் கடந்த நவம்பர் மாதம் பெய்த மழையினால் மண் திட்டு சரிந்து விழுந்து உள்ளது. இதனால் இந்த மண் திட்டை ஒட்டி உள்ள நடைபாதையும் பழுதடைந்து உள்ளதால் பொதுமக்கள் நடந்து செல்ல முடியாமல் மிகவும் சிரம்மப்படுகின்றனர். எனவே மேற்கண்ட

இடத்தில் உள்ள பொதுமக்களின் நலன் கருதி மேற்கண்ட இடத்தில் தடுப்புச் சுவர் அமைக்க வேண்டியது மிகவும் அவசியம் ஆகிறது. எனவே இதற்காக தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டுத் தொகை ரூ.9.35/– இலட்சத்திற்கு நகராட்சி வருவாய் நிதியில் பணி செய்ய நகர்மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :-**

**அனுமதி வழங்கலாம்.**

நகரமன்ற தலைவர்,
உதகமண்டலம் நகராட்சி.

ஆணையாளர்,
உதகமண்டலம் நகராட்சி.